www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 2nd Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| புவியியல் Geography | Three Hours / Gr -12 (2023) | 22 | T | I,II |

மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடங்கள்

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள்**
- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது. பகுதி I, 15 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி I இற்கான விடைகள் இவ்வினாத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்.
- பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்
- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III இல் அ, ஆ,இ என மூன்று பகுதிகள் தரப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- பகுதி I, பகுதி II, பகுதி III ஆகியவற்றிற்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.

## பகுதி - I

1. இலங்கையின் 1:50,000 இடவிளக்கப்படங்களில் சமவெளிப் பிரதேசங்களில் காணப்படுகின்ற உயரம் கூடிய பகுதியைக் குறித்துக் காட்டுவதற்கு பயன்படுத்தப்படுவது
   (1) திரிகோண கணித நிலையம் (2) இட உயரம்
   (3) சமவுயரக் கோடுகள் (4) சம ஆழக் கோடுகள்
   (5) முகடு (.......)

2. பூகோள இட நிலைப்படுத்தல் முறைமை (GPS) யின் அடிப்படைப் பிரிவுகளின் எண்ணிக்கை யாது?
   (1) 10 (2) 8 (3) 6 (4) 5 (5) 3 (.......)

3. பின்வருவனவற்றிலிருந்து கணினியின் உள்ளீட்டு, வெளியீட்டு மூலகங்கள் அடங்கிய விடையைத் தெரிக.
   (1) விசைப் பலகை, அச்சு உபகரணம்
   (2) வருடிகள், காந்த இறுவட்டு
   (3) திரை, அச்சு உபகரணம்
   (4) எண்ணிலக்கமாக்கும் கருவி, விசைப் பலகை
   (5) திரை, வருடிகள் (.......)

4. படம் ஒன்றினை இலகுவில் வாசித்தறிவதற்கு அவசியமானது.
   (1) அளவுத் திட்டம் (2) திசை (3) குறியீட்டு விளக்கம்
   (4) மூலம் (5) அமைவிடம் (.......)

5. பின்வருவனவற்றில் கரையோர அம்சங்களை மட்டும் உள்ளடக்கிய விடைத் தொகுதி
   (1) சமவெளி, மேட்டுநிலம், பள்ளத்தாக்கு
   (2) களப்பு, கழிமுகம், குடா
   (3) ஆறு, கிளையாறு, மியாந்தர் வளைவு
   (4) பின்னிய ஆறு, மலைத்தொடர்கள், தீவு
   (5) மணற்றரை, முனை, நீர் வீழ்ச்சி (.......)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

6. புவியோட்டின் சீயல், சீமா ஆகிய இரு படைகளையும் பிரிக்கின்ற எல்லை
   (1) மொகோஹோவிசிக் எல்லை (2) கூற்றன் பேர்க் எல்லை (3) படைத் தரிப்பு எல்லை
   (4) இடைத்தரிப்பு எல்லை (5) கொன்ராட் எல்லை (…….)

7. இலங்கையில் முழுமையாக சானோகைற் பாறைகளினால் உருவாகிய மலைத்தொடர்
   (1) பீதுறு தால கால (2) நக்கிஸ்ஸ் (3) தோட்டப் பால
   (4) புளுதோட்டை (5) றக்குவான (…….)

8. எரிமலைக் கக்குகையினால் உருவாகிய தள்ளல் நிலவுருவங்களை உள்ளடக்கியுள்ள விடைத்தொகுதி
   (1) கூட்டெரிமலை, எரிமலைக் கூம்பு, சாம்பல் கூம்பு
   (2) இடைத் தீப்பாறை, குழிவுத் தீப்பாறை, எரிமலை வாய்
   (3) ஆட்பிளவுக் கற்குகை, லாவாக் கூம்பு, எரிமலை வாய்
   (4) பாதாளக் கற்குளை, ஆட்பிளவுக் கற்குகை, இடைத் தீப்பாறை
   (5) வில்லைத் தீப்பாறை, குமிழ் தீப்பாறை, சீதர்மரத் தீப்பாறை (…….)

9. குறிப்பிட்ட புவியியல் பிரதேசத்திற்குட்பட்ட வளிமண்டலத்தில் நீண்ட காலமாக நிலவிய வானிலை மூலக் கூறுகளின் சராசரித் தொகுப்பு
   (1) வானிலை (2) வானிலை மூலகங்கள் (3) காலநிலை
   (4) புவி வெப்பப் பரம்பல் (5) வெப்ப நிலையின் நேர்மாறல் (…….)

10. சமுத்திரங்களிலும் ஏனைய நீர்நிலைகளிலும் பரம்பியுள்ள நீரானது வளிமண்டலத்திற்குச் சேர்க்கப்படும் முறை
   (1) ஆவியுயிர்ப்பு (2) பனிபடு நிலை (3) ஒடுங்குதல்
   (4) படிவு வீழ்ச்சி (5) ஆவியாக்கம் (…….)

11. நிலையான வறுமை என்பது
   (1) உணவு, உடை, உறையுள் போன்ற அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை
   (2) தென் சகாரா போன்ற ஆபிரிக்க நாடுகளில் காணப்படும் வறுமையாகும்.
   (3) நீர்ப்பற்றாக் குறையினால் ஏற்படும் வறுமை
   (4) சேரிப்புறங்களில் வாழும் மக்களின் வறுமை
   (5) சர்வதேச வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் வறிய மக்கள் தொகை (…….)

12. குடித்தொகையில் இடப் பெயர் வினைத்துரிதப்படுத்துகின்ற தள்ளு விசைக் காரணிகள்
   (1) சுதந்திரம், வேலைவாய்ப்பு, உட்கட்டமைப்பு வசதி
   (2) யுத்தம், தொழிலின்மை, அரசியல் காரணிகள்
   (3) அபிவிருத்தி, உவப்பான காலநிலை, வேலை வாய்ப்பு
   (4) இடர்கள், அபிவிருத்தி, உவப்பான காலநிலை
   (5) யுத்தம், தொழிலின்மை, சுதந்திரம் (…….)

13. பின்வரும் தெரிவுகளில் இலங்கையின் தோட்டக் குடியிருப்புக்களின் நான்கு பிரதான கூறுகளைச் சரியாக எடுத்துக் காட்டும் விடைத்தொகுதி எது?
   (1) நவீன கிராமங்கள், கிராமிய நிலையங்கள், பிரதேச நிலையங்கள், சிறு நகரங்கள்
   (2) குளம், நெல், வயல், சேனைகள்
   (3) சந்தை, காடு, வயல், குளம்
   (4) தோட்டப்பகுதி, தொழிற்சாலைகள், லயன் வீடுகள், கோவில்கள்
   (5) சந்தை, மருத்துவமனை, காடு, சிறு நகரங்கள் (…….)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

14. தற்கால நகராக்கத்தில் பளுபனானா (Bluue Banana) என அழைக்கப்படும் நகராக்க வலயம்
    (1) வட மேல் பிரித்தானியாவில் இருந்து இத்தாலியின் ஜெனோவா வரை பரவலடைந்துள்ள நகராக்க வலயம்
    (2) மத்திய தரைக் கடற்கரை எல்லையில் இருந்து ஜெனீவா நகரம் வரை பரவலடைந்த நகராக்க வலயம்
    (3) மத்திய ஐரோப்பாவை சூழ்ந்து விருத்தியடைந்த நகராக்க வலயம்
    (4) லிஸ்பனில் இருந்து பரிஸ் வரை விருத்தியடைந்த நகராக்க வலயம்
    (5) ஜேர்மனியின் பேர்ளின் நகரிலிருந்து மொஸ்கோ நகரை உள்ளடக்கிய நகராக்க வலயம்
    (…….)

15. இலங்கையின் நகரப் பிரதேசங்களை வரையறப்பதற்குப் பயன்படுத்தப்படும் சுட்டி
    (1) சனத்தொகை (2) நிர்வாக நியதிகள் (3) பொருளாதார நடவடிக்கைகள்
    (4) உட்கட்டமைப்பு வசதிகள் (5) சமூக நல வசதிகள் (…….)

## பகுதி - II

**அறிவுறுத்தல்கள்**

- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- இவ்வினாக்களுக்கு விடையளிப்பதற்கு 1:50,000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதியும் உலகப் புறவுருவப்படமும் வழங்கப்படும்.

1. இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1:50,000 அளவுதிட்டத்திலமைந்த இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. அப்படத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

குறிப்பு
- விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும், அதன் உபபிரிவு இலக்கத்தினையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
- இடவிளக்கப்படத்தின் மேல் விடைகள் எழுதப்படக் கூடாது.
- உமது விடைத்தாளுடன் தரப்பட்டுள்ள இடவிளக்கப்படத்தினை இணைக்க வேண்டாம்.

(i) 1:50,000 அளவுத்திட்டத்திற்குரிய நேர்கோட்டு அளவுத்திட்டத்தினை வரைக. (02 புள்ளிகள்)

(ii) 1 – 6 வரை தரப்பட்டுள்ள பௌதிக, பண்பாட்டம்சங்களைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(iii) C இனால் குறித்துக் காட்டப்பட்டிருக்கும் பெருந்தோட்டப் பயிரினையும் D இனால் குறித்துக் காட்டப்பட்டிருக்கும் வீதியையும் பெயரிடுக. (01 புள்ளிகள்)

(iv) படப் பிரதேசத்தின் வட கிழக்குப் பகுதியின் மானிட நடவடிக்கைகளை வரையுறுத்துள்ள இரண்டு பௌதிகக் காரணிகளை விளக்குக. (04 புள்ளிகள்)

(v) உமக்குத் தரப்பட்ட பிரதேசத்தின் குடியிருப்புப் பரம்பல் தொடர்பாக இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (04 புள்ளிகள்)

(vi) படப் பகுதியின் நெற்செய்கைப் பரம்பலைத் தீர்மானித்த பௌதிகக் காரணிகள் இரண்டினை விளக்குக. (03 புள்ளிகள்)

(vii) படப் பிரதேசத்தின் போக்குவரத்து பாங்கு தொடர்பாக சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

2. தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தில் வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

(i) யூரல் மலைத் தொடர்

(ii) மிசூரி மிசுசிப்பி நதி

(iii) கம்சக்கா குடா நாடு

(iv) மலாக்கா நீரிணை



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

(v) லானோஸ் புல்வெளி

(vi) செங்கடல்

(vii) கம்போல்ட் நீரோட்டம் (திசையுடன்)

(viii) லண்டன் நகரம்

(ix) ஆசியாவில் அபிவிருத்தியடைந்த நாடு

(x) *1992 புவி உச்சி மகாநாடு நடைபெற்ற நகரம்* *(10 புள்ளிகள்)*

## பகுதி - III பௌதிகப் புவியியல்

3. (i) ஆற்றின் இளமைப் பருவத்தில் காணக்கூடிய பண்புகள் நான்கு குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) ஆறு அரித்த பருப்பொருட்களைக் கொண்டு செல்லும் இரண்டு முறைகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) ஆற்று அரிப்பினால் உருவாகின்ற பின்வரும் நிலவுருவங்களை விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*

1. விரைவோட்ட ஆற்றுத் தொகுதி
2. நீர்வீழ்ச்சி
3. பானைக் குழிவுகள்

(iv) ஆற்றின் பின்வரும் படிதல் நிலவுருவங்களை விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*

1. பனியெருத்தேரி
2. பின்னிய ஆறுகள்
3. கழிமுகம்

4. (i) பச்சை வீட்டு வாயுக்கள் நான்கினைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) வளிமண்டலத்தின்

A. மாறன் மண்டலம்

B. படை மண்டலம்

ஆகிய படைகள் தொடர்பாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) உயிர்க் கோளத்தின் முக்கியத்துவத்தினை இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) நீர்க்கோளம் மாசடைகின்ற இரண்டு வழிமுறை உதாரணங்களுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*

## பகுதி - IV மானிடப்புவியியல்

5. (i) குடியிருப்பு என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) கிராம, நகரக் குடியிருப்புக்களின் மூன்று பண்புகளை ஒப்பிட்டு விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) உலக நகரமயமாக்கலின் காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மூன்றினை விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) இலங்கையின் நகராக்கத்துடன் தொடர்புடைய சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட மூன்று நடவடிக்கைகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*



Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

6. (i) இடப்பெயர்வு என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

   (ii) இடப்பெயர் வினைத்துரிதப்படுத்துகின்ற மூன்று காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

   (iii) இடப்பெயர்வாளர்களால் குடியேறும் நாடுகளில் ஏற்படும் சாதகமான மூன்று விளைவுகளை விளக்குக. (06 புள்ளிகள்)

   (iv) இலங்கையின் சர்வதேச இடப்பெயர்வில் காணப்படும் மூன்று பண்புகளை விளக்குக. (06 புள்ளிகள்)

## பகுதி - V செய்முறைப் புவியியல்

7. (i) இடவிளக்கப்படம் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

   (ii) கீழே தரப்படும் விடயங்களைப் பௌதிக, பண்பாட்டம்சங்கள் எனப் பாகுபடுத்துக.
   பாதுகாக்கப்பட்ட வனஎல்லை, மேட்டுநிலம், குளம், நீர்ப்பிரிமேடு, அணைக்கட்டு, சேற்று நிலம், கழிமுகம், அமைக்கப்பட்ட பிரதேசம் (04 புள்ளிகள்)

   (iii) செய்முறைப் புவியியலில் பயன்படுத்தப்படும் நுட்பமுறைகளில் ஒன்றான படம் தொடர்பாக மூன்று விடயங்களை முன்வைக்க. (05 புள்ளிகள்)

   (iv) புவியியல் பாட கற்றல் - கற்பித்தலில் பயன்படுத்தப்படுகின்ற இரண்டு நுட்ப முறைகளை விளக்குக. (04 புள்ளிகள்)

8. (i) தொலையுணர்வு தொழில் நுட்பம் (RS) என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

   (ii) தொலையுணர்வு தொழில் நுட்பத்தில் தரவு சேகரிப்பதற்குப் பயன்படுகின்ற இரண்டு முறைகளை விபரிக்குக. (05 புள்ளிகள்)

   (iii) தொலையுணர்வு தொழில் நுட்பத்தின் மூன்று பிரயோகங்களை விளக்குக. (04 புள்ளிகள்)

   (iv) பூகோள இடநிலைப்படுத்தல் முறைமை (GPS) பயன்பாட்டினால் பெற்றுக் கொள்ளக் கூடிய இரண்டு நன்மைகளை விளக்குக. (04 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!